# சுதேசமித்திரன்

நமக்கு தொழில் நாட்டுக்கு உழைத்தல் இமைபொழுதும் சோராதிருத்தல்

சக்கரம் 1 ஆரம் 7 நவம்பர் 2015


## மழை- முன்னெச்சரிக்கை

## உளர் முதலாளியம்

## அம்மா

## தமிழின் புராதனத்துவமும் நவீனத்துவமும்

## பாரத மாதாவின் ஜாதகம்

**Be the change - Right at the moment please!**

# உளர் முதலாளியம்

கார். அகிலன்

உளர் முதலாளியம் (Crony Capitalism) என்பது ஒரு போலியான முதலாளித்துவம். தகுதி, பொருளாதாரம், வெற்றி, சந்தையின் தேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் அல்லாமல் வெறும் நட்பு ரீதியில் தனியாருக்கு வழங்கப்படும் திட்டம், உரிமை அல்லது பதவியே உளர் முதலாளியம் எனப்படுகிறது. (உளர் என்பது உடந்தை என்னும் பொருள் தரும் சொல்) அரசு தந்நாட்டு மக்களுக்கு நன்மை செய்யாமல் தனது அமைச்சரவை உறுபினர்களின் நட்பு வட்டத்தில் இருப்போரின் நிறுவனங்களுக்கு குறைந்த விலைக்கு இடம் ஒதுக்குவது, வட்டியில்லா கடன் வழங்குவது போன்ற காரியங்களை செய்து பொருளாதாரத்தை உயர்த்திவிட்டதாக தமக்குத்தாமே விதந்தோதிக்கொள்கிறது.

எத்தனை ஒப்பந்தங்கள் 'முறையாக' கையெழுத்தாகின்றன? தகுதி உடையோருக்கு உரிமங்கள் வழங்கப் படுகின்றனவா? நம் கிராமங்களில் சாலை அமைப்பதில்கூட அரசியல்வாதிகளின் தலையீடு இருப்பது அனைவரும் அறிந்ததே. சாலை அமைக்க ஒப்பந்தம் கோரி தனியாருக்கு அழைப்புவிடுக்கப்படும். அழைப்பை ஏற்று பல நிறுவனங்களோ அல்லது தனிநபரோ ஒப்பந்தப்புள்ளிகளை அரசு அதிகாரிகளிடம் வழங்குவர்.

> மென்பான ஆலைகளுக்கு
> தண்ணீரை வாரி இறைப்பது போல
> சலுகைகளை வழங்கும் அரசு
> தண்ணீர் பற்றாக்குறையை
> கவனிக்கத் தவறுவது ஏன்?

இறுதியில் அரசியல்வாதிகளின் நண்பருக்கோ, அதிகாரிகளின் நண்பருக்கோ உரிமம் வழங்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகும். ஊழலின் துவக்கப் புள்ளி இதுதான்.

## ஏழைகளை பாதிக்கும் !

வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பல இருந்தும் வறுமை ஒழியாதிருப்பது ஏன்? மென்பான ஆலைகளுக்கு தண்ணீரை வாரி இறைப்பது போல சலுகைகளை வழங்கும் அரசு தண்ணீர் பற்றாக்குறையை கவனிக்கத் தவறுவது ஏன்? மாநிலம் முழுவதும் அரசே சாராயக் கடைகளை திறந்து வைத்திருப்பதின் உள்நோக்கம் என்ன? சிறு நிறுவனங்கள் சாராயம் காய்ச்ச அனுமதி இல்லை ஆனால் சில தனியார் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருப்பது உண்மைதானே? யாருடைய நிறுவனங்கள்? முன்னாள் இந்நாள் அரசியல்வாதிகளின் நண்பர்களின் நிறுவனங்கள். முறையாக வழங்கப்பட்டிருக்குமா?

பெருமுதலாளிகள் அரசியல்வாதிகளின் நண்பர்களாக இருப்பதை யாரும் குறை சொல்லப் போவதில்லை. அவர்களின் செல்வாக்கை பயன்படுத்தி முறையற்ற வழியில் சலுகைகள் பெறுவதை தடுக்கவேண்டும். பெருமுதலாளிகளுக்காகவே இந்த அரசு ஒரு திட்டத்தை செயல்படுத்த துடிக்கிறது. நிலப் பறிப்புச் சட்டம். நிறுவனங்கள் தங்களது ஆலைகளை அமைக்க நிலம் தேவைப்பட்டால் உரிமையாளரின் அனுமதியின்றி அவர்களின் நிலங்களை பறித்துக்கொள்ள இச்சட்டம் வழிவகை செய்யும். விவசாயிகளின் வாழ்வாதாரமான விளைநிலங்களை அரசே கொள்ளையடித்து தனக்கு வேண்டியவர்களுக்கு கொடுக்கும் சட்டம்.

> “பெருமுதலாளிகளுக்கு வட்டியில்லா அல்லது குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வங்கிகள் ஏழைகளின் கல்விக் கடனுக்கு 14% வட்டி கேட்கின்றன.”

குஜராத்தில் தனியார் ஆலை அமைக்க விவசாய நிலங்களை அடிமாட்டு விலைக்கு கையகப்படுத்திக் கொடுத்தது அரசு, சில நாட்களில் அனைத்து விளைநிலங்களும் விலைநிலங்களாயின. ஏழைகளிடமிருந்து சொற்ப விலைக்கு பறிக்கப்பட்ட நிலங்கள் இன்று பல லட்சங்களுக்கு விற்கப்படுகின்றன. பணம் ஏழைகளை அடைந்ததா என்றால் இல்லை.

கிராமங்களில் சாலை அமைப்பதிலிருந்து பெருநிறுவனங்களின் ஆலை அமைப்பதுவரை அனைத்து துறைகளிலும் இப்போலி முதலாளித்துவம் நஞ்சாக பரவிக்கிடக்கிறது.

வேலைவாய்ப்பின்மை, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம், ஊழல் என இதன் பாதிப்புகளை அடுக்கிகொண்டே போகலாம். மக்களுக்கு எதிரான அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் முறையற்ற கூட்டு சதியே இந்த உளர் முதலாளியம். வங்கி சேவைகள், விவசாயம், வீட்டுவசதி, போக்குவரத்து, உற்பத்தி என எல்லா துறைகளிலும் இம்முதலாளியம் ஏற்படுத்தும் பாதிப்புகள் ஏழை மக்களை பெருமளவில் பாதிக்கிறது. பெருமுதலாளிகளுக்கு வட்டியில்லா அல்லது குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வங்கிகள் ஏழைகளின் கல்விக் கடனுக்கு 14% வட்டி கேட்கின்றன. 200 கோடி ரூபாய் கடன் வாங்கிய ஒரு தொழிலதிபர் நிம்மதியாக வாழ முடிகிறது ஆனால் வாழ்வாதாரமான விவசாயத்துக்கு 25 ஆயிரம் கடன் வாங்கிவிட்டு திருப்பி செலுத்த முடியாத நம் நாட்டு விவசாயிகள் படும் வேதனையை எப்படி விவரிப்பது?

நெடுஞ்சாலைகள் அமைக்க குறிப்பிட்ட தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம், சுங்கச்சாவடிகள் அமைத்துக்கொள்ள

அனுமதி. சாராய ஆலைகள் அமைத்துக்கொள்ள அனுமதி. குடிசைகளை ஒழித்து வீடுகள் கட்டிதருவதில் ஊழல். வீடுகளுக்கு மின்சாரம் வழங்க எடுத்துக்கொள்ளும் நேரத்தில் 50% கூட தனியார் நிறுவனங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் எடுத்துக்கொள்ளாத நேர்மை. இவைதானே இன்றைய நிலை?

சலுகைகளை பெருநிறுவனங்களுக்கு வழங்குவதை நிறுத்திவிட்டு, மக்களுக்கு தேவையானவற்றை நிறைவுடன் வழங்கினால் போதாதா? நாட்டின் வளர்ச்சி தொழில் முன்னேற்றதிலா? சமூக முன்னேற்றதிலா? தொழில் வளர்ச்சி என்ற பெயரில் தனியார் நிறுவனங்களும் அரசும் இணைந்து நடத்தும் நாடகங்களை இனியும் கண்டுகொள்ளாமல் இருக்கலாமா? ஊழலைத் தடுக்க, பணம் பெற்றுக்கொண்டு உரிமம் வழங்கும் அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் பதவியிலிருந்து நீக்க, அரசு ஏலங்கள் முறையாக நடக்க, தகுதி அடிப்படையில் உரிமம் வழங்க எந்த அமைப்பு, கட்சி, இயக்கம் முன்வருகிறதோ அதை மக்கள் ஆதரிக்க தயாராக வேண்டும்.

தொடர்

# தமிழின் புராதனத்துவமும் நவீனத்துவமும்

கெஜலட்சுமி

தமிழிலுள்ள அறநூல்களுள் முதன்மையானதான திருக்குறள் - வள்ளுவர் வாக்குகள் அடங்கிய பொக்கிஷமே திருக்குறள். எடுத்துகாட்டாக

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனும் சொல்.**

மகன் தன் தந்தைக்குச் செய்யத்தக்க கைமாறு, இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும். இவ்வாறு தந்தை, மகன் உறவு மற்ற உறவுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை உணர்த்தும் தமிழ் நம் 'செந்தமிழ்'. இச்சிறப்பாலேயே இத்தமிழ் நூல் 'உலக பொதுமறை' என்று அழைக்கபடுகிறது!

***சிலப்பதிகாரம்*** - இளங்கோவடிகள் புகார் காண்டத்தில் கீழ்வருமாரு தொடங்குகிறார். சமண மதத்தை சார்ந்தவராயினும், இறைவனால் படைக்கப்பட்ட அல்ல இயற்கையையும் போற்றவேண்டும் என்பதை உணர்த்தி சமயம் கடந்த சகோரதத்துவத்தை பாராட்ட வேண்டும் என்று எடுத்துரைக்கிறார்.

**திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கலர்த்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்**
**வங்கண் உலகுஅளித்த லான்.**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு**

**ஔவையார்** - எத்தனை பெண் புலவர்கள் ஔவையார் பெயரில் வாழ்ந்திருந்தாலும், அவர்களின் நோக்கம் ஒன்றே. ஒற்றுமை, அறநெறி, பண்பு போன்றவற்றையே மக்களுக்கு உணர்த்தும் சீறிய தமிழ்பாக்கள். எளியவரும் புரிந்துணர்வு கொள்ளும் ஒப்பில்லா சாரங்கள்.

1. **அறஞ் செய விரும்பு**
2. **ஆறுவது சினம்**
3. **இயல்வது கரவேல்**
4. **ஈவது விலக்கேல்**
5. **உடையது விளம்பேல்**
6. **ஊக்கமது கைவிடேல்**
7. **எண் எழுத்து இகழேல்**
8. **ஏற்பது இகழ்ச்சி**
9. **ஐயம் இட்டு உண்**
10. **ஒப்புரவு ஒழுகு**
11. **ஓதுவது ஒழியேல்**
12. **ஔவியம் பேசேல்**
13. **அஃகஞ் சுருக்கேல்**

இவ்வாறு எளிய நடையில் அறநெறியை போதிக்கும் இலக்கியங்கள் தரணியில் வேறு எங்கும் காணக் கிடைக்காத மாணிக்க கற்கள் நம் புராதனத்துவ இலக்கியங்கள். ஆம்! 'அறம் செய்வதற்கு விரும்பவேண்டும்' என்பதை கேட்டுக்கொள்ளுகங்கள் நண்பர்களே!.

**மேலும் சைவ சித்தாந்த சாத்திரங்கள்** - தேவாரம், திருவாசகம் மற்றும் வைணவ சாத்திரங்களான நாலாயிர திவ்விய பிரபந்தம் போன்றவை தமிழுக்கு அரிதான அணிகளங்களாக திகழ்ந்தன.

மொத்தத்தில் தமிழ் நூல்கள் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் உயர்ந்த நூல்கள் என்று உரக்க உலகுக்கு உரைக்கலாம்! தமிழின் புராதனத்துவத்தையும், தமிழர்களின் பண்பாட்டையும் அறிவதற்கு இவற்றை விடச் சிறந்த சாதனங்கள் வேறு எவையுமில்லை எனக் கொள்வோம்.

'மனிதன் வடிவில் சிவலிங்கம் என்று சித்தர்களில் மிக முக்கியமான ஆசான் திருமூலர் அருளிய திருமந்திரத்தில்

**"மானுடராக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுடராக்கை வடிவு சிதம்பரம்**
**மானுடராக்கை வடிவு சதாசிவம்**
**மானுடராக்கை வடிவு திருக்கூத்தே"**

என்று உடற்கூற்று அறிவியலை கூறுகிறார். மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் சிதம்பரம் கோயிலை இங்கு நோக்கதக்கது!. இப்படி நம் தமிழ் புராணத்தில் இல்லாத விடயமே கிடையாது. பொருள், கருப்பொருள், உரிப்பொருள் இவற்றை உணர்ந்து கொண்ட வெளிநாட்டவர் அனைத்து கருத்துகளையும் களவாடி, 'அணுகுண்டு' முதல் 'விமாணம்' வரை கண்டுபிடித்தாக பறைசாற்றி கொள்கின்றனர்.

**தொடரும்**

# மனமே மலர்ந்திடு தீய பழக்கம் ஒழித்திடு

வித விதமா புகையிலை பாக்கு போடாதே! அதை
போட்டு நீயும் உடல் நலத்த கெடுக்காதே!
எப்பவுமே புகையிலையை எடுக்காதே! புகையில
எடுத்துவிட்டா மனைவி கூட மதிக்காதே!
வேண்டாம் புகை பழக்கம் – அத
தவிர்த்தா குடும்பம் இனிக்கும் – தீய
பழக்கம் இருந்தா உன் குடும்ப நிலை தவிக்கும்
(வேண்டா வேண்டா வேண்டாமே தீய பழக்கம் வேண்டாமே)

ஒரு நாளு பஸ்டாண்டுல காலங்காத்தால டீ கடைக்கு முன்னால
காலையில் எழுந்து டீ குடிச்சிபிட்டு பேப்பரை படிச்சிகிட்டு
வெட்டிகத பேசிகிட்டு புகையும் புடிச்சிகிட்டு ஹான்ஸ்ம் போட்டுக்கிட்டு
பக்கத்துல துப்பிவிட்டன் அவன் கன்னத்துல பட்டுடிச்சி – அப்புறம்
கண்டபடி த்ட்டுனாண்ட மானம் கெட்டு போனதடா – போட்டவனுக்கு
புற்றுநோய் எச்சி பட்டவனுக்கு தொற்று நோய்
வேண்டா வேண்டா வேண்டாமே தீய பழக்கம் வேண்டாமே!

நகர்புற எல்லையில மூல முடக்கு ரோட்டுல
மூட்டை முடிச்சிகளும் முட்டு முட்டா கிடக்குது முட்டை ஓடுகளும்
நடுரோட்டில் கிடக்குது சமயல் கழிவுகலும் வீதியில் மிதக்குது
குடி நீருல கழிவு நீரும் கலக்குது குப்பை மேடு பெருகி போச்சி
குப்பைதொட்டி மறஞ்சி போச்சி – அப்புறம்
நடபாத தொலைஞ்சி போச்சி நாற்றமும்ந்தா பெருகி போச்சி
வேண்டா வேண்டா வேண்டாமே தீய பழக்கம் வேண்டாமே!



# அம்மா

பியூலாராஜா குமாரி

இந்திராணி அம்மா இட்லிகடை நடத்தியே தனது மகனை டிகிரி படிக்க வைத்தாள். கடன் உடன் வாங்கி லஞ்சம் கொடுத்து நல்ல வேலையும் வாங்கி தந்தாள். காலகாத்தில் திருமணத்தியும் முடித்து வைத்தாள்.

இதோ இன்று இவளுடைய மகன் மருமகள் பேரன் பேத்தி என நான்கு பெரும் சென்னையில் செட்டிலாகி விட்டனர். இவளையும் தன்னுடன் வரும்படி எவ்வளவோ வற்புறுத்தினர். ஆனால் இவள் இந்த கிராமத்திலேயே அதே இட்லி கடையை நடத்தி வாழ்க்கையை ஓட்டி வருகிறாள்.

ஒவ்வொரு வருடமும் தீபாவளிக்கு மகனுடன் ஒரு வாரம் இருந்துவிட்டு வருவாள். போகும் போது மகனுக்கும் மருமகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் துணிமணி வாங்கி கொண்டு பட்சணம் செய்து கொண்டு போவாள்.

தான் சேர்த்து வைத்திருக்கும் சேவிங்-பேங்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று உண்டியலை உடைத்தால், இதில் 3000 ரூபாய் இருந்தது. மகனுக்கு இந்த வருடம் தீபாவளிக்கு பட்டு வேஷ்டி சட்டை என்று நினைத்ததால் இந்த பணம் மகன் வேஷ்டி சட்டைக்கே சரியாக இருக்கும். பேரக்குழந்தைகளுக்கும், மருமகளுக்கும் என்ன செய்வது என்று யோசித்தாள். பத்து வட்டிக்கு கடன் வாங்கி தினசரி தண்டல் போல் கட்டிவிடலாம் என்று முடிவு செய்தாள்.

அங்கே அவளுடைய மகனுக்கு தீபாவளி போனஸ்+சம்பளம் கிடைத்தது. அவர்கள் குடும்பத்துடன் மாம்பலம் ஜவுளிக்கடைக்கு நுழைந்தனர். இன்னும் இரண்டு நாளில் தீபாவளி என்பதால் மாம்பழமே மனித நெரிசலில், மூச்சு விட முடியாமல் திணறியது. மனைவிக்கு 2000 ரூபாயில் சுடிதார், மகன், மகள் இருவருக்கும் அவர்கள் விரும்பிய வகையில் டிரஸ். அவருக்கும் பேன்ட் சட்டை எடுத்தாகிவிட்டது. கடைசியாக அம்மாவிற்கு புடைவை எடுக்க மூன்றாவது மாடிக்கு வந்தனர். சுங்கடி போட்ட புடைவை எடுங்க அம்மா அது மாதிரிதான் கட்டுவாங்க என்றனர். கடைக்காரன் எடுத்து போட்ட புடைவையில் 1100 ருபாயில் ஒரு புடைவை இவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அரக்கு கலரும் மெருகு கலரும் சேர்ந்து நேர்த்தியாக நெய்யப்பட்டு அழகா இருந்தது. உடனே அவனுடைய மனைவி குறுக்கிட்டு, ஏங்க இட்லி கடையில் கட்டிக்கிட்டு இருக்க சுங்கடி போட்ட நூல் புடவை எடுங்க என்று சொல்லி ரூ 450-ல் தேர்வு செய்து எடுத்தும் வந்து விட்டனர்.

அவனது அம்மா கடன் வாங்கி மகனுக்கு பட்டு சரிகை போட்ட வேஷ்டி, சட்டை எடுத்தாள். பேரக்குழந்தைகளுக்கும், மருமகளுக்கும் துணி எடுத்து வந்தாள். அம்மாவை பார்த்ததும் ஆசையோடு வரவேற்று, தான் வாங்கி வந்த புடைவை தந்து கட்டிகிட்டு வாம்மா, பட்டாசு வெடிக்கலாம் என்று அழைத்தான்.

தான் கொண்டு வந்த துணி பட்சனத்தை எடுத்து தந்தாள். அம்மா தனக்காக கஷ்டப்பட்டு இவ்வளவு அதிக விலை கொடுத்து வாங்கிய வேஷ்டி சட்டையை பார்த்ததும் ஆயிரம் சவுக்கடி ஒரே நேரத்தில் தாக்கியது போலிருந்தது. நேற்று அம்மாவிற்கு தான் ஆசைப்பட்டு எடுத்த புடையை அவள் மனைவி தடுத்து நூல் புடைவை தேர்வு செய்தாலே, தன் அம்மாவிற்கு துணி தேர்வு செய்ய அவள் யார்? நேற்று அவளை ஒன்றும் சொல்லாமல் இருந்த தனது இயலாமையை நினைத்து தலை குனிந்தான்.

## பாரத மாதாவின் ஜாதகம்

**வேம்பத்தூர் கிருஷ்ணன்**

விடுதலை போராட்ட ஈகி திரு. வேம்பத்தூர் கிருஷ்ணன் எழுதிய பாரதமாதாவின் ஜாதகம் என்ற நூலிலிருந்து. [சென்ற மாத தொகுப்பின் தொடர்ச்சி]

கிமு பத்தாம் நூற்றாண்டில்
கிரேக்கர் தமிழர் வாணிகமாம்
கௌதம புத்தர் கிமு ஆறு (563)
கருணைச்சமண மகாவீரர்(539)
கிரேக்கமன்னர் அலெக்சாண்டர்
கிமு நாலில் நம்வாசல்(322)
காவலில்லாத பாரதம் காக்க
சந்திர குப்தர் சாணக்யர்
கிமு மூன்றில் அசோகர் ஆட்சி
பௌத்தம் துதிர்த்த கலிங்கப் போர்(263)
சோழர்பெருமை கிமு ரெண்டில்
வடபுலத்திலே கனிஷ்கர் ஆட்சி (120)
'கி.பி' முதலாம் நூற்றாண்டில்
கரிகாற் சோழரின் கல்லணையாம்
திருமுறைச் சோழர் 'கிபி' இரண்டு
தில்லை மகத்துவம் மூன்றாகும்.
நான்கில் விக்கிரமாதித்யன் (380)
ஐந்தில் ஆரியபட்டர் திறன்(476)
ஆறாம் நூறில் சாளுக்கியர் (543)
ஏழில் ஹர்ஷர்சாம்ராஜ்யம்(60)
எட்டாம் நூற்றாண்டில் காலடிச்
சங்கரர்(788)
ஒன்பதில் நேபாள நாடுபிறந்தது(879)
பத்தில் கஜினி முகம்மது படையால்
பாழ்! தூள்!! சோம நாதபுரம்(999)
பதிநோண்டில் ஸ்ரீராமாநுஜர்
பன்னிரண்டாவது நூற்றாண்டில்..

பார்புகழ் ராமதாஸர், கபீர்,
மத்வா சார்யர் அவதாரம்(1118)
பிருத்துவிராசன், ஜெயசந்திர
ராஜ்புத்ரர்களின் உட்பகையால்
பேராசைகொண்ட அன்னியனின்
பிரித்தாளும் சூழ்ச்சி ஜெயித்தது!
ஐம்பத்தாறு தேச பாரதம்
அன்னியர் பலரது ஆக்கிரமிப்பால்
ஆளும் தகுதியை இழந்துநம் முன்னோர்
அடிமைகளான காரணம் என்ன?
நம்மவ ரிடத்துப் போட்டி பொறாமை
"நான்நீ" என்னும் ஒற்றுமை யின்மை
நாளொருகொள்கை பொழுதொரு
லட்சியம்!
நலமனைத்தையும் இழந்தவரானோம்.
கிரேக்க மங்கோலிய ஆப்கான் துருக்கி
காபூல் சுல்தான் கில்ஜி பாதுஷா...
ஆங்கில பிரஞ்சு டச்சுக் காரர்கள்
அவர்பின் சிலநம் ஐந்தாம் படைகள்
கோட்டையை இழந்து குடிசையில்
கிடந்தோம்
கும்பிடும் ஆலயம் போர்க்கள மானது
ஏட்டிலும் எழுத்திலும் பலபல சட்டம்
எங்கு பார்த்தாலும் அன்னியர்
கொட்டம்!
ஏனிந்தக் கொடுமை, காரணம் ஒன்றே
இந்தியர் நம்மிடம் ஒற்றுமை இல்லை!

ஆணும் பெண்ணும் அடிமைக லானோம்
அனைத்து உரிமையும் இழந்தவ
ரானோம்
கானல் நீரென ஆனது புனிதம்
கலப்படம் கண்டது பாரத மனிதம்
ஏன்எனக் கேட்கத் துணிவி லாமல்
யந்திரம் ஆனோம், காலம் சுழன்றது!
பதிமூன்றாவது நூற்றாண்டில்
பாபரின் வழிவழிச் சுல்தான்கள்
முகம்மது என்பவன் இறந்திடவே
அரியணை மேலே குத்புதீன் (1206)
பதிநாலில்தான் வாஸ்கோ-டா-காமா
கள்ளிக்கோட்டைதுறை முகம் வந்தான்
பாண்டியர் சந்ததி முடத்தனத்தால்
மதுரைக்கோயிலில் மாலிக் காபூர்.

**தொடரும்...**

## மழை - முன்னெச்சரிக்கை!

எம்.மரிய பெல்சின்

மழை ஒழுங்காக பெய்யவில்லை, ஏரிகள் வறண்டுகிடக்கின்றன. கிணறுகளில் நீர்மட்டம் குறைந்துவிட்டது, ஊரெங்கும் தண்ணீர் பஞ்சம் என்று சொல்பவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். ஆம்... பருவமழை தொடங்கிவிட்டது. ஊரெல்லாம் ஒரே வெள்ளக்காடு. பெய்கின்ற மழைநீர் எங்கே செல்கிறது? மழைநீர் சேகரிப்பு பற்றி ஏதோ கடமைக்கு வாய்திறக்கும் அரசு அதை அதிரடியாக செயல்படுத்துவது பற்றி யோசித்திருக்கிறதா? வெளிநாடுகளில் மழைநீரை அப்படியே பூமிக்குள் பாய்ச்சும்விதமாக நவீனமுறையிலான கான்கிரீட் + பிளாஸ்டிக் சாலை போட்டிருக்கிறார்கள். இங்கே சாலைகளின் தரம் உயர்த்துகிறோம் என்று சொல்லி உயரத்தை மட்டுமே கூட்டுகிறார்கள். விளைவு இதுவரை ஒழுங்காக பாய்ந்தோடிய மழைநீர் எங்கே செல்வது? என தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. ஏற்கனவே சென்னையில் சிறுமழை பெய்தாலே குட்டைபோல் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மூச்சுத்திணறும் அளவுக்கு போய்விடுகிறது. கடந்த 2 நாட்களாக பெய்த மழை நீர் சில முக்கிய சாலைகளில் குளம், குட்டைபோல் தேங்கி நிற்கிறது. மழைநீர் வடிகால்கள் எல்லாம் என்ன ஆயிற்று? வயிறு பற்றி எரியுது? இயற்கை பொய்த்துவிட்டது, தண்ணீர் இல்லை... நிலத்தடி நீர் குறைந்துவிட்டது என்று ஒற்றை வரியில் சில சமாளிப்புகளை சொல்லி நழுவும் அரசாங்கம் மக்கள் நலன் குறித்து சிந்தித்ததுண்டா? சில மாதங்களுக்குமுன் லட்சக்கணக்கான மரக்கன்றுகளை நடப்போகிறோம் என்று சொன்னார்கள். லட்சம் வேண்டாம்... சில ஆயிரம் மரங்கள் போதும். அவர்கள் கணக்கின்படி அவர்களால் நடப்பட்ட மரக்கன்றுகள் இன்றைக்கு தளிர்விட்டு சிறுமரமாகியிருக்க வேண்டும். சரி... இந்த வீண் விவாதம் வேண்டாம். இன்றையசூழலில் பெய்யும் மழைநீரை அப்படியே பூமிக்குள் செலுத்த அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, சூடுபிடித்திருக்கும் வடகிழக்கு பருவமழை காரணமாக குளிர்ச்சியான சூழல், ஆங்காங்கே நீர் தேங்கி நிற்கிறது. இதன் காரணமா அடுத்து வரும் நாட்களில் நோய்களும் அணிவகுக்க தொடங்கிவிடும். எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியமாகும். குளிர்ச்சியான தட்பவெப்பநிலை நிலவுவதால் கூடியமட்டும் நாம் குடிக்கும், குளிக்கும்

நீர் சூடானதாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். ஜலதோஷம், சளி, தலைவலி இருந்தால் யூகலிப்டஸ் இலை, நொச்சி இலை போன்றவற்றை போட்டு கொதிக்க வைத்து இளஞ்சூட்டில் குளியுங்கள். உடல்வலி இருந்தால் இந்த இலைகளுடன் நுணா (மஞ்சணத்தி) இலை சேர்த்து கொதிக்க வைத்து குளியுங்கள். தலையை நன்றாக உலர்த்திவிட்டு சாம்பிராணி புகை காட்டுங்கள். மூக்கால் சுவாசிக்காமல் உச்சந்தலை, பின்னந்தலை போன்றவற்றை காட்டுங்கள். இதேபோல் தலைக்கு குளித்ததும் தலையை உலர்த்தியதும் மிளகை பொடியாக்கி மெல்லிய பருத்தி துணியில் வைத்து உச்சந்தலையில் சூடு பறக்க தேய்த்துவிடுங்கள். ஓமத்தை லேசாக வறுத்து பொடியாக்கி அதனுடன் கற்பூரம் சேர்த்து மூக்கால் சுவாசியுங்கள். கற்பூரத்தை தேங்காய் எண்ணெயில் போட்டு காய்ச்சி நெஞ்சு, விலா பகுதி போன்றவற்றில் பொறுக்கும் சூட்டில் தேய்த்தால் சளித்தொல்லை மற்றும் மழைநேர பிரச்சினைகளில் இருந்து காத்துக்கொள்ள முடியும்.

மேலும், உண்ணும் உணவு தொடங்கி அனைத்துமே சூடானதாக இருந்தால் மிகவும் நல்லது, காலையில் அருந்தும் தேநீரில் இஞ்சி, துளசி சேருங்கள். இஞ்சித்துவையல், தூதுவளை சட்னி, சுக்கு காபி, கற்பூரவல்லி பஜ்ஜி, கல்யாண முருங்கை வடை என அனைத்துமே சளித்தொல்லையில் இருந்து நிவாரணம் அளிக்கும் சிற்றுண்டிகளாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். இரவில் உறங்குவதற்குமுன் பூண்டுப்பால் அருந்தினால் நல்ல நிவாரணம் கிடைக்கும். ஒரு நபருக்கு பூண்டுப்பால் செய்ய 10 பூண்டுப்பல் உறித்து 50 மில்லி பாலுடன் அதே அளவு நீர் விட்டு கொதிக்க வைத்து பாதியாக வற்றியதும் மிளகு, மஞ்சள்தூள் சேர்த்து இறக்க வேண்டும். அதனுடன் பனங்கல்கண்டு சேர்த்து சாப்பிட்டால் சளித்தொல்லைகளில் இருந்து நிவாரணம் பெறலாம்.



அதுமட்டுமல்ல... சைனஸ், ஆஸ்துமா நோயாளிகளுக்கும் இந்த பருவகாலம் பெருந்தொல்லையாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் வந்த நோயிலிருந்து நிவாரணம் பெறவும், அவதிகளிலிருந்து காத்துக்கொள்ளவும் முன்னெச்சரிக்கையாக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். பீனிசம் எனப்படும் சைனஸ் பிரச்சினையால் மூக்கடைப்பு, தும்மல், நீர் ஒழுக்கு போன்றவை ஏற்படும். அப்படிப்பட்டவர்கள் நொச்சி இலையை இரவில் தலையணையில் வைத்து உறங்குவது, நொச்சி இலையை ஆவி பிடிப்பது (வேது பிடித்தல்) போன்றவற்றால் சீரான சுவாசம் பெறலாம். இதேபோல் நல்லெண்ணெயில் நொச்சி இலைகளைப்போட்டு கொதிக்க வைத்து ஆற வைத்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து வெந்நீரில் குளிப்பதால் நிவாரணம்

கிடைக்கும். தும்பைப்பூவின் சாறு இரண்டு அல்லது மூன்று சொட்டு மூக்கில் விடுவதால் சுகம் பெறலாம். முசுமுசுக்கை இலைச்சாற்றுடன் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி தலைக்கு தேய்த்து குளிப்பதாலும் சைனஸ் சரியாகும். இதே முசுமுசுக்கை இலையை அரிசி மாவுடன் கலந்து தோசை சுட்டு சாப்பிட்டு வந்தாலும் சைனஸ் பிரச்சினையிலிருந்து நிவாரணம் பெறலாம்.

ஆஸ்துமா நோயாளிகள் சங்கு இலையை துவையல் செய்து சாப்பிடுவதால் நிவாரணம் பெறலாம்.முசுமுசுக்கை இலையை அரிசி மாவுடன் கலந்து தோசை சுட்டு சாப்பிட்டு வருவது, இலையை நெய்விட்டு வதக்கி மதிய உணவுடன் சாப்பிடுவது அல்லது துவையல் செய்து சாப்பிடுவது போன்றவற்றாலும் ஆஸ்துமாவில் இருந்து விடுதலை பெறலாம். வெங்காயச்சாறு, இஞ்சிச்சாறு, முருங்கைப்பட்டைச்சாறு போன்றவற்றை தனித்தனியாகவோ, கலந்தோ சாப்பிடுவதால் ஆஸ்துமா அவதி குறையும்.

# Be the change – Right at the moment please!

**Surendren Tina**

A boy who celebrated his birthday for the 19th time, said that he always make some resolutions on that auspicious day. He makes a note of all the good qualities that he sees every day and then finally seems to ignore every point in it. Not because he was careless. But his poor brain is not able to process all these at a time.

"Tan Tadadatan tadadatan tdada tdada tdada...", That was the movie I was seeing. Hope you have guessed it. I got inspired by that movie and then I decided to stop using the MNC products as much possible. I know it is not possible to stop using it completely. But still, I can do my best to avoid it. My friend drinks Coke and Pepsi a lot. Even though I don't drink those, I never thought of advising him to stop drinking it. I have even bought them for him many times. I just felt guilt. Then I stopped buying it when anyone asked for it to me. This was the step that I had taken. And now without even my knowledge, I started looking for the Manufacturer Details in any unknown product that get, like chocolates. Even for the shower.. I am using *Shiyakkai*, which is a home-made product, more over it is an Indian Product.

What you see today, if you feel it as a good habit, it is wise to upgrade that quality with in you right at that moment. Piling up of all those qualities and trying to make a chart out of it and then planning to execute it is really a harder one. Our Human mind is a single process executer. It cannot handle every amendment that we make at a moment.

The truth is, our mind doesn't understand how much important any process or our thought is. It just considers all these thoughts as a pile of information and as a result it is us who fail in executing bulk actions.

**Voice of the Brain:** Dear fellow bearers, kindly understand my weakness and act accordingly. You say that you do not want me to master you. I never tried to be so. And you people have to understanf that I'm not your slave. Don't dump all your desires on me. I too have some limitations and I do agree that. Act Accordingly!

## தன்னார்வலரின் குரல்




*இவர்தான் மகேந்திர வர்மன், தற்போது பட்டையைப் படிப்பு படித்துவருகிறார். தனது வாரவிடுமுறை நாட்களில் சமூக அக்கறை கொண்ட சில அமைப்புகளுடன் இணைந்து களப்பணிகள் செய்து வருகிறார். மேலும் இவர் AWARE அமைப்பினருடன் இணைந்து பெண் குழந்தைகள் முன்னேற்திற்கான பணிகளை செய்து வருகிறார். அதில் ஒரு கட்டமாக பள்ளிகளுக்கு சென்று அங்கு உள்ள குழந்தைகளுக்கு பெண் குழந்தைகள் முன்னேற்றம் பற்றிய வகுப்புகள் எடுப்பதுடன் அதிகாரமளித்தல் பற்றிய முகன்மையான கானோளிகளையும் காட்சிபடுத்தி வருகிறார்.*

"ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான வேறுபாடு குறைந்து அனைவரும் சமமாக கருத வேண்டும். பள்ளிகளுக்குச் சென்று அங்கு உள்ள குழந்தைகளுக்கு அதிகாரமளித்தல் பற்றிய பாடம் எடுக்கும்போது குழந்தைகளிடம் இருந்து கிடைக்கும் வரவேற்பு இது போன்ற நிகழ்வுகளை இன்னும் உற்சாகமாக செய்ய தூண்டுகிறது" என்கிறார் மகேந்திர வர்மன்.

தோழரின் பணிகள் சிறப்பாக தொடர சுதேசமித்திரனின் வாழ்த்துகள்.

## சமூக அக்கறைக் கொண்ட இயக்கங்களின் கடந்தமாத பணிகள்

### பார்வை மாற்று திறனாளிகளுக்கான பாடம் படித்தல் நிகழ்வு (IOPENING )

1-11-15 அன்று காலை ப்ரெடென்சி கல்லூரியில் 120 பார்வை மாற்று திறனாளி பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு 120 தன்னார்வலர்கள் புத்தகம் படித்து காண்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது. "Youth for Seva & Lit the Light" அமைப்புகள் இணைந்து நடத்திய நிகழ்வில் கல்லூரி பேராசிரியர் திரு.விஜயகுமார் அவர்கள் உரையாற்றும்போது சென்னையில் பார்வை மாற்றுதிறனாளிகள் மாணவர்களுக்கு பாடம் சொல்லி கொடுக்கும் விழிப்புணர்வும், அவர்களுக்கு தேர்வு எழுதுவதற்கும் உரிய நேரத்தில் அதற்குரிய நபர்கள் கிடைக்காமல் பல பேர் திறமை இருந்தும் அதை மேம்படுத்திகொள்ள முடியாமல் தவிக்கின்றனர் மேலும் பெரும்பான்மையான சமயங்களில் தேர்வு எழுதமுடியாமலும் போய் விடுகின்றது எனவே அதற்கான விழிப்புணர்வு நிகழ்வு நிறைய நடத்தப்பட வேண்டும் என்றார். இந்நிகழ்வின் ஒருங்கிணைபாளர்கள் நாதன் மற்றும் பரத் அவர்கள் தற்போது பார்வை மாற்று திறனாளிகளுக்கான வாழ்வாதரம் பெருக்குதல் மற்றும் அவர்கள் முன்னேற்றத்திற்காக நிறைய இளைஞர்களை ஒருங்கிணைத்து வாரந்தோறும் படித்து காண்பித்தல் மற்றும் ஒலி வழி பாடம் என பல முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம் எனவெ இதற்கு பங்களிப்பு தர விரும்புபவர்கள் **"9894949878 / 9940296125"** என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ள அறிவுறுத்தினர். இறுதியாக "கலாம் – நாம் அறியா பக்கங்கள்" பிரெய்லி புத்தகம் 120 பிரெய்லி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சுமார் 250 பேருக்கும் மேல் கலந்துகொண்டனர்.இதற்கான ஏற்பாடுகளை youth for seva, Lit the ight & Chennai Round Table 95 இணைந்து சிறப்பாக மேற்கொண்டிருந்தனர்.

### Walk for a VISION 2030

October 11th is the World International Girl Child Day, so AWARE, a group of motivated volunteers organised a rally in Marina beach for 3km to sensitise the people about the importance of a girl Child. Rally mainly focused on 6 topics which is found to be a threat for a girl Child:




1. Save Girl Child - Protection
2. Stop Gender Discrimination
3. Stop Child Marriage
4. Stop Child Trafficking
5. Stop Violence against Women
6. Health & Sanitation.

Walk for a Change to achieve Vision 2030 is an effort to raise young female voices, create a new generation of change makers and promote action for gender equality. This rally was completely led by the youths who are believed to be a change factor towards these causes along us.

This rally is believed to be a foundation for local organizations concerned with girls' issues, such as girl's education, adolescent health, sex trafficking, sexual harassment, and other Rights based organization, to share their message.

Mr. Sandhiyan (+91 8124354921) Coordinator of AWARE spoke about the importance of a girl child and he wanted to add all this in the school syllabus too.

**தங்களின் மேலான பார்வைக்கு:**

*உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் சமூக நற்சிந்தனைகளை வெளிக்கொணரவும். பார்த்த, படித்த, அறிந்த அல்லது செய்த சமூக செயல்பாடுகளை தெரியப்படுத்துங்கள். நாட்டின் வளர்ச்சி நோக்கிய சமூக அக்கறையுள்ள கதைகள், கட்டுரைகள், கவிதைகள் வரவேற்கப்படுகின்றன.*

தங்களது மேலான ஆலோசனைகளுக்கும் பங்களிப்பிற்கும் தொடர்புகொள்ளுங்கள்.
மின்னஞ்சல் : emagz@thozhan.org
பேசி: 8122195591